# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 220/2018

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : Tr. Saravanan |
| Father/Husband's Name | : Kallan |
| Village | : Puthupattinam, |
| Taluk | : Kalpakkam Post |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2024.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கல்பாக்கத்தில் வசித்து மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2018 அன்று மாலை சுமார் 06.25 மணியளவில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை எதிரில் உள்ள எஸ்பிஐ ஏடிஎம்யில் பணம் எடுப்பதற்காக செல்லும் போது இடதுபுறம் எனது இருசக்கர வாகனம் TN 19 S 3668 ே ஹாண்டா சிட்டி வாகனத்தை நிறுத்திவிட்டு சென்றேன். திரும்பி வந்து பார்த்த போது எனது வாகனம் அங்கில்லை நான் அக்கம் பக்கம் தேடி பார்த்தேன். பின்னர் எனது நண்பர்கள் பாபு, பிரேம்குமார் ஆகியோர்களுக்கு போன் முலம் தகவல் தெரிவித்தேன் அவர்களும் வந்து தேடினார்கள். வாகனம் கிடைக்கவில்லை அதனால் மறுநாள் 20.07.2018 அன்று செங்கல்பட்டு நகர காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். சாட்சியிடம் வழக்கு புகார் காட்டிய போது அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் அந்த புகாரை தான் அளித்ததாகவும் கூறினார். **( அந்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

சாட்சியிடம் இவ்வழக்கு சொத்தான வாகனத்தின் புகைப்படத்தை காட்டிய போது அந்த வாகனம் தான் காணாமல் போன வாகனம் என்று கூறினார். சாட்சி அந்த வாகனம் தற்போது தன்னிடம் உள்ளதாக கூறினார். (**வழக்கு சொத்தின் புகைப்படம் மற்றும் குறுந்தகடு (Both Series) அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எனது வாகனம் காணவில்லையென்று தான் புகார்அளித்தேன்எ ன்றால் சரிதான். போலிசார் என்னை எப்பொழுது விசாரித்தார்கள் என்று கேட்டால் புகார் அளிக்கும் போதும், வாகனம் கிடைத்தவுடன் விசாரித்தார்கள். எனது வாகனத்தை யார்எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 220/2018**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : திரு. பிரேம்குமார் |
| Father/Husband's Name | : அங்கப்பன் |
| Village | : புதுப்பட்டிணம், |
| Taluk | : கல்பாக்கம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2024.

Accused absent. Petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது புதுப்பட்டிணம் கல்பாக்கத்தில் வசித்து கார்பண்டராக பணி செய்து வருகிறேன். கடந்த 19.07.2018 அன்று அசா 1 சரணவனின் தங்கை பிரசவத்திற்காக மருத்துவமனையில் இருந்தார். அந்த சமயத்தில் ஏடிஎம்மில் பணம் எடுப்பதற்காக சரவணன் அவரது இருசக்கர வாகனத்தில் TN 19 S 3668 என்ற ேஹாண்டா சைன் வாகனத்தில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனை எதிரிலுள்ள எஸ்பிஐ ஏடிஎம்மிற்கு வந்தார். அந்த சமயத்தில் அவரது இருசக்கர வாகனம் காணவில்லையென்று போன் மூலம் தகவல் செய்தார். நான், பாபு மற்றும் நண்பர்கள் வந்து வாகனத்தை தேடி பார்த்தோம் வாகனம் கிடைக்கவில்லை. நாங்கள் இரவு வீட்டிற்கு சென்றுவிட்டோம். பின்னர் அசா 1 சரவணன் இது சம்மந்தமாக மறுநாள் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை—**

அசா 1 சரவணன் தகவல் சொல்லி தான் எனக்கு வாகனம் காணாமல் போன விவரம் தெரியும் என்றால் சரிதான். வாகனத்தை யார் எடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அப்போது தெரியாது. அசா 1 சரவணன் எனது மச்சான் என்பதால் அவருக்கு ஆதரவாக போலிசார் கேட்டு கொண்டதன் பேரில் சம்பவயிடத்திற்கு செல்லாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை—** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.